கல்வித் திணைக்களம் யாழ்ப்பாணம்



தொழில்நுட்பக்கல்வி

அபிவிருத்தி ஆண்டு 1987

# தொழில் நுட்பம்

வாழ்க்கைக்கு எம்மை தயாராக்குவோம்







Library
2007
371.42
CUP PB

# தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்தி ஆண்டு

# 1987

371:42 CUP

AR/PB

ARCHIVES

யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களத்தின்
தொழில்நுட்பப்பிரிவு வெளியீடு

நூலகம்
இலங்கைப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாண வளாகம்

University of Jaffna Sri Lanka
RECEIVED
-9-25
Periodicals Division
Library

ச. சுப்பிரமணியம்
கல்வி அலுவலர்,
(தொழில்நுட்பம், முறைசாராக் கல்வி)

# Year of Development of Technical Education 1987

EDUCATION DEPARTMENT
JAFFNA.
TECHNICAL EDUCATION UNIT

S. SUBRAMANIAM
Education officer
(Technical Education, Non Formal Education.)
Jaffna.

## கல்விப்பணிப்பாளரின் ஆசியுரை

மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியையே குறிக்கோளாகக் கொண்டு அதனைப் பெறமுடியாத கட்டத்தில் விரக்தியுற்றுத் தம் எதிர்காலமே இருளாகிவிட்டதென்ற எண்ணத்தை அறவே நீக்கி உயர்கல்வி பெறுவதற்குத் தொழில்சார் கல்வி மூலம் வழியுண்டு என்னும் புதிய பாதையைக் காட்டவே 1987 ஆம் ஆண்டைத் தொழில் நுட்பக் கல்வி அபிவிருத்தி ஆண்டாகக் கொள்ள உள்ளோம்.

கல்வி வெள்ளை அறிக்கையில் இதுபற்றிக் கல்வி அமைச்சும் அழுத்தம் காட்டுகிறது.

மாணவர்களின் ஆற்றல்கள் பெற்றோரின் உந்துதல்களால் வெளிவரமுடியாது இருக்கும் இவ்வேளையில் பெற்றோரின் மனமாற்றத்துக்கும் இக் கைந்நூல் பேருதவியாக அமையும்.

மாணவர்களைச் சுயமாகச்சிந்திக்கச் செய்து அவர்தம் சுய ஆற்றல்களான அறிவு, கைத்திறன், நன்மனப்பாங்கு போன்றவற்றை வெளிக்கொணர்வதற்காகவே, கல்வித் திணைக்களத் தொழில் நுட்பப்பிரிவு உத்தியோகத்தர்கள் இச் சீரிய செயற்பாட்டை இவ்வாண்டு செய்ய எமக்கு உதவுகிறார்கள். அவர்கள் சேவை சிறந்து எமது மாணவச் சமுதாயத்துக்கு உயிர்த்துடிப்பையூட்ட இறைவனை இறைஞ்சுகின்றேன்.

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

இ. சுந்தரலிங்கம்
கல்விப்பணிப்பாளர்

ARCHIVES

# Message of the Director of Education

The aim and goal of all students in University Education. To alleviate the frustration likely to arise out of the non availability of University Education to all, we declare the year 1987 as Job Oriented Technical Education Development year, to pave the way to a new sphere of life through Technical Education. Even the 'White Paper on Education' stresses the importance of Technical Education.

This mannual may be useful to parents to promote the talents and abilities latent in their Children. Besides the parents' outlook on their children's education may undergo a change.

The Technical Education Staff of the Department of Education is helping us to carry out this development work that leads to the inspiration of the student Community by tapping the resources of talent, ability and perseverance.

I pray that their endevour produces full results in the field of technical education and help the upliftment of the student community.

R. Suntharalingam
Director of Education, Jaffna.

# தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்தி ஆண்டு 1987

நோக்கங்கள் :

மனிதனின் தனியாற்றல்களை வளர்த்துச் சமூக வாழ்வுக்கேற்ற பூரண மனிதனுக்குவதே கல்வியின் நோக்க மென்பதையும், பூரண மனிதனுனவன் அடிப்படை அறி வுடையவனுகவும், சமூக நீதியுணர்வு படைத்தவனுகவும், நாட்டின் நற்பிரஜையாகவும், பொருளாதார வளம் பெற் றவனுகவும் திகழ்வான் என்பதும் அதற்குக் கல்வியறிவே கருப்பொருளாக அமையுமென்பதனையும் அனுபவத்தின் மூலம் அறிந்துள்ளோம்.

எமது நாட்டிற் தற்போது அமுல்செய்யப்பட்டுவரும் கலைத்திட்டமானது சூழல், பாடசாலை, பல்கலைக்கழகம், பல்தொழில்நுட்பக் கல்லூரி, தொலைக் கல்வி நிறுவனம் போன்ற கல்வியோடு தொடர்புடைய வேறு நிறுவனங்கள் வாயிலாக அமுல் செய்யப்படுகின்றது. ஆயினும் மாணவர் கள் கல்வியின் நோக்கங்களை முழுமையாகப் பெற்றுப் பய னடைவதில் வெற்றி கொண்டுள்ளார்கள் என்று கூறுவதற் கில்லை.

க. பொ. த. சாதாரணம் வரை பொதுக் கல்விகற் கும் மாணவர்களில் பத்துச் சதவீத மாணவர்களே உயர் தர வகுப்புகளுக்கும் (க. பொ. த. உயர்தரம்) உயர்தர வகுப்புகளில் பயின்ரேரில் பத்துச் சதவீதத்திற்கும் குறை வானவர்களே பல்கலைக்கழகத்துக்குள்ளும் பிரவேசிக்கின்ற னர். ஏனையோர் கல்வியில் திசை காணுது இடையிலே தமது பாடசாலைக் கல்வியை இடை நிறுத்திவிட்டுச் சாதாரண உலக வாழ்வில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இவர்களுக்கு ஆரம்பத்தி லிருந்தே கல்வி வழிகாட்டல் மூலம் அவரவர் ஆற்றல்

களுக்கேற்பக் கல்வித்துறைகளைக் காண்பதற்கான வழி முறைகளைக் கலைத்திட்டத்தில் வைத்தல் வேண்டும். இதன் வாயிலாக இவர்கள் தம் வாழ்வைக் கொண்டு நடாத்து வதற்கு ஏற்ற நல் மனப்பாங்கை விருத்திசெய்து அதன் மூலம் பொருளாதாரவளம் மிக்கவர்களாக நெறிப்படுத்த வேண்டியது அவசியமாகின்றது. மனிதன் பொருளாதார வளமுடையவனாக இருக்கவேண்டுமாயின் தொழிலொன் றைத் தேடிக்கொள்ள வேண்டியவனாகின்றான். தொழி லொன்றைத் தேடிக்கொள்வதற்குத் தொழில்பற்றிய அறிவு, அடிப்படைச் செய்முறைத்திறன், தொழில்பற்றிய நல் மனப்பாங்கு ஆதியன அவசியமாகின்றன. இத் திறன் களை மாணவர் மத்தியில் அபிவிருத்தி செய்வதையே முக் கிய நோக்கமாகவும், ஏனைய பாடங்களைத் தொடர்பு படுத்தி ஆக்கபூர்வமான முயற்சியிலீடுபடுவதற்குச் சந்தர்ப் பத்தை அளிக்கு முகமாகவும் பெறுமதி வாய்ந்த சேவை அல்லது உற்பத்தியைச் செய்ய முடியுமென்ற நம்பிக்கையை அனுபவ ரீதியாக மாணவர்களிடையே வளர்க்கு முகமாக வும், தொழில்நுட்பக் கல்வியானது கலைத்திட்டத்தில் சேர்க் கப்பட்டுப் பொதுக் கல்வித்திட்டத்தில் இயைபுபடுத்திக் கற்பிக்கப்படுகிறது.

பொதுக் கல்விகற்று உயர்தர வகுப்புக்கோ, பல்கலைக் கழகங்களுக்கோ செல்லமுடியாதோர் தமது பொருளா தாரத்தைப் பெருக்கவுதவும் தொழில் சார்ந்த கல்வியை முறைசாராக் கல்வித்திட்டத்தின் மூலமோ, பல்தொழில் நுட்பக்கல்லூரிகள் மூலமோ, ஏனைய திணைக்களங்களால் நடாத்தப்படும் பயிற்சி நெறிகள் போன்றவற்றின் மூலமோ பயிற்சிபெறச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இவ்வாறான சந்தர்ப்பம் பாடசாலையைவிட்டு வெளியேறு வோரின் எண்ணிக்கையில் மிகக்குறைந்த சதவீதத்தின ருக்கே கிடைக்குமளவினதாக உள்ளது. இதனால் மிகுதி யான மாணவர்கள் தொழிலொன்றைத் தேடித் தமது பொருளாதார வளத்தைப் பெருக்கிக்கொள்ள முடியாமல் உள்ளனர்.

அது மாத்திரமன்றிப் பல்கலைக் கழகக் கல்வியென்று சென்ற மாணவர் தொகையில் ஒரு பகுதியினர் கட்டாய வேலைக்கமர்த்தல் திட்டத்தால் வேலைவாய்ப்புப்பெற ஏனை யோரில் பெரும்பகுதியினர் வேலைவாய்ப்பு இல்லையெனக் கூறிக் கொண்டு வேலைவாய்ப்பு மனுக்களையும், மகஜர்களையும் அனுப்பிக்கொண்டிருப்பதையும், வேலையற்ற பட்டதாரிகள் சங்கமமைத்துத் தமக்கு வேலைவாய்ப்பு அளிக்குமாறு கல்விப்பணிப்பாளருக்கும் கல்வி அமைச்சுக்கும் மகஜர் அனுப்பிக்கொண்டிருப்பதையும் பத்திரிகை வாயிலாக நாம் அறிகின்றோம். பல்கலைக் கழகம்வரை சென்று இவ்வளவு உயர்கல்வி கற்றிருந்தும், உயர்தர, சாதாரண தரங்கள் வரை கற்றிருந்தும், தகுதிப்பத்திரங்கள் பெற்றிருந்தும் தொழில்வாய்ப்பொன்றைத் தேடிக்கொள்ளாமைக்கான காரணங்கள் யாவை என நாம் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டியதவசியமாகின்றது. ஒரு நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியில் அந்நாட்டு மக்கள் யாவரினதும் பங்களிப்பு மிக அத்தியாவசியமாகும் அவ்வாறன்றிச் சமூகத்தி லொருபகுதியினர் உழைத்துப் பொருளாதாரத்தைப் பெருக்கிக்கொண்டிருக்க ஒரு பகுதியினர் வாளாவிருந்து உண்டுகொண்டிருப்பின் நாடு வளர்ச்சியுறு நிலை ஏற்படுவதோடு மனித குலத்துக்கு இது நியாயமுமாகாது. இவ்வாறு இருப்பது நாட்டின் நற்பிரஜைகளுக்குரிய குணாதிசயங்களல்ல. விசேடமாகப் பாடசாலையை விட்டு விலகிய நடுத்தர வயதுடைய கட்டிளம் பருவத்தினரே இவ்வாறு வேலையில்லையென்று கூறிக்கொண்டிருக்கின்றனர்.

இவ்விளவயதினர் சனத்தொகையடிப்படையில் சராசரி நாற்பது வீதமானோராகும். இவ்வளவு வீதத்தினரை நாட்டினபிவிருத்தியில் பங்குபற்றாமல் வைத்திருப்பது சமூகத்தின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு உதவாதது மட்டுமல்ல வீழ்ச்சிக்கும் கொண்டு செல்லும். இந் நிலையானது வயிற்றில் பூச்சி, புழுவின் ஆதிக்கமுடைய பிள்ளைக்கு எவ்வளவு தான் போசாக்கான உணவு அளித்தாலும் பிள்ளை

ஆரோக்கியமாக வளராததை ஒத்ததாகும். இந் நிலை தொடர்ந்து செல்லுவதை அவதானிக்குமிடத்துப் பொதுக் கல்வியும் தொழில்நுட்பக் கல்வியும் தமது பங்களிப்பைச் சரிவரச் செய்யவில்லை என்பது புலனாகின்றது. எனவே இதற்கான காரணிகளை இனங்காணுதலும், வெளியிடலும், இவற்றைச் சீராக்கி அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலுமே தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்தியாண்டின் நோக்கமாகும். இதை நிறைவு செய்வதில் மாணவர், ஆசிரியர், அதிபர், கல்வி அதிகாரிகள், பெற்றோர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் ஆகியோரினதும், பத்திரிகைகள், தொலைக் காட்சி, வானொலி போன்ற தொடர்புச் சாதனங்களினதும் கல்வித் திணைக்களமன்றி ஏனைய திணைக்களங்களினதும் உள்ளூராட்சிமன்றங்களினதும் பங்களிப்பை யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் வேண்டி நிற்கின்றது.

## வேலைவாய்ப்புகளைத் தேடிக்கொள்வதற்குத் தடையாகவுள்ள காரணிகளாவன

1. மனப்பாங்கு சார்ந்தவை

1-1 உடை நலுங்காத தொழில்கள் உயர்ந்தவை, உடற் தொழிலால் ஈடுபடும் தொழில்கள் தாழ்வானவை என எண்ணுதல்.

1-2 நாம் கற்ற உயர் கல்விக்குக் கைத்தொழில்கள் ஏற்றதல்ல எனும் தவறான கணிப்பு.

1-3 தொழில்களைச் சாதியடிப்படையில் வைத்துக் கணித்தல்.

1-4 சமூகத்தில் தன் உழைப்பின் பங்களிப்பை உணராமல் பிறர் உழைப்பில் உண்டு களிக்கும் மனோநிலை,

1-5 கைத்தொழில் புரிவது அந்தஸ்துக்குக் குறைவான்து எனும் தவருன கணிப்பு.

1-6 தொழிலொன்றைத் தேடிக்கொள்வதில் ஆர்வ மின்மை.

1-7 சமூகத்திற்கும், வீட்டிற்கும் தம் பிள்ளை ஆற்ற வேண்டிய பங்களிப்பைப் பெற்ருேர் உணராமை.

1-8 சுயநம்பிக்கையின்மை.

1-9 குறைந்த முயற்சியில் கூடிய லாபம் அடையவேண் டும் எனும் பேராசை.

1-10 உழையாது குறுகிய வழிகளில் பணம் சேகரிக்கவேண் டும் எனும் தவருன எண்ணம்.

1-11 உழைப்பில் உற்சாகமின்மை.

1-12 எதையும் குறைகூறும் மனுேநிலை.

1-13 தொழிலைத் தெரிவதில் பொதுநல நோக்கின்றிச் சுய நல நோக்கில் செயற்படுதல்.

1-14 தமது ஆற்றலுக்கும், திறமைக்கும் ஏற்ற தொழிலைப் பிள்ளைகள் தெரிவதற்குப் பெற்ருேர் தடையாக இருக்கும் மனுேநிலை.

2. செய்முறைத்திறன் சார்ந்தவை

2-1 தொழில் புரிவதற்கான அடிப்படைச் செயல்முறைத் திறன் இன்மை.

2-2 பொதுவான கைத்திறன்களை வளர்த்துக்கொள்வதில் பாடசாலை மட்டத்திலும், ஏனைய நிலைகளிலும் ஆர் வம் காட்டாமையும், துணிவுடன் செயற்படாமையும்.

2-3 பட்டதாரிகளும் செய்முறையான வேலைகளில் ஈடுபடு வதற்கு வேண்டிய அனுபவம் இன்மையும், மனப் பாங்கு இன்மையும்.

2-4 தரமான பொருட்களை உற்பத்தி செய்வதிலும், சேவையாற்றுவதிலும், விற்பனை செய்வதிலும், ஆர் வம் காட்டாமை.

2-5 கைத்திறன் இருப்பினும் பொருள்களை ஆக்கி அவற் றைச் சந்தைப்படுத்தி அவற்றின் பயன்களை அனுப விக்கத் தெரியாமை.

3. தொழில் பற்றிய அறிவு சார்ந்தது

3-1 நாட்டில் புரியப்படும் பல்வேறு தொழில்கள் பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றுக்கொள்வதில் ஆர்வ மின்மை.

3-2 செய்முறைத் திறனற்ற அறிமுறை அறிவை மட்டும் கொண்டிருத்தல்.

3-3 சந்தை வாய்ப்புள்ள தொழில்களைத் தெரிந்து செய் வதில் திறமையின்மை.

3-4 கைத்தொழில்கள் உடனடியாகப் பெருமளவு வருமா னத்தைத் தரவேண்டும் எனும் கணிப்பு.

3-5 தெரிவு செய்த தொழிலை விருத்தி செய்வது, நடாத் துவது பற்றிய அறிவு இன்மை,

3-6 உற்பத்திகளைச் சந்தைப்படுத்தல், ஈடுபட்டுள்ளோர் ஸ்தாபனங்களைப் பற்றிய போதிய அறிவின்மை.

3-7 தொழில்களை ஆண்களுக்குரியவை, பெண்களுக்குரி யவை எனப் பாகுபடுத்தல்.

3-8 தமது திறமை, ஆற்றல், தகுதி பற்றிய தவருன கணிப்பு.

3-9 தமது விருப்புக்கும், ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட கல்வித்துறையைத் தெரிந்து கற்றிருத்தல்.

3-10 கைத்தொழிற் துறையினருக்கு வழங்கப்படும் வேதனங்கள் பற்றிய தகவல்கள் தெரியாதமை.

## பொது

1. தெரிவுசெய்யப்பட்ட தொழிலுக்கான மூலப்பொருள், எரிபொருள் போன்ற உபபொருட் தட்டுப்பாடு போக்குவரத்துச் செலவு அதிகரிப்பு ஏற்படுதல்.

2. தொழிற்சாலை, விற்பனை நிலையங்களில் உள்ள பொருள்களுக்குப் பாதுகாப்பின்மை, சேதங்கள் ஏற்படல்.

3. தரமான தொழிலாளர் பற்ருக்குறைகள், அரசியல் சூழ்நிலைகள் காரணமாகத் தொழிற்சாலைகள் மூடப்பட்டமை.

4. தொழிற்சாலைப் பிரிவுகள் மூடப்பட்டமையால் வேலையாட்குறைப்பு.

5. "உத்தியோகம் புருஷ லட்சணம்" என்ற சமூக உணர்வு.

6. உள்ளூர்த் தொழில்களை ஆரம்பிப்பதற்கான அனுமதி வழங்குவதில் பாரபட்சம்.

7. ஆண் அரச உத்தியோகத்தருக்குத் திருமணச் சந்தையில் கிராக்கி.

8. ஆக்கபூர்வமான ஆராய்ச்சித்திறன் மிக்கோர் வெளிநாடுகளுக்குச் செல்வதால் ஆய்வாளர் பற்ருக்குறை;

9. உடலுழைப்புக்கும், உடை நலுங்காத் தொழில்களுக்குமான வேதன வேறுபாடு பெருமளவு இல்லை என்பதை உணராமை.

10. பெண்கள் உழைத்தாலும், உழைக்காவிடினும் அவர்களின் பெற்றோர் அல்லது சகோதரர் எப்பாடுபட்டாவது உழைத்துப் பெண்களைக் காப்பாற்றுவதோடு சீதனம் வழங்கிக் கரைசேர்க்க வேண்டும் எனும் கடமைப்பாடு உள்ளதாக ஒரு சமூக விதியை ஏற்படுத்திக் கொண்டு ஒரு பிரிவினர் தமது சமூக பங்களிப்பை உணராது இருத்தல்.

11. அரச உத்தியோகத்தைத் தேடிக்கொண்டால் சும்மாவிருக்க வீடு, வளவு, நகை, இனுமுடன் பெருந்தொகை நிதி சீதனமாகக் கிடைக்கும் எனும் நம்பிக்கை கொண்ட அநாகரிகக் கொள்கை.

## விருத்திசார்ந்த நல்மனப்பாங்கே அவசியம் தேவை.

வேலைவாய்ப்புக்களைத் தேடிக்கொள்வதற்குத் தடையாகவுள்ள காரணிகளை ஆராயுமிடத்துப் பாடசாலைக் கல்வியினூடாக அபிவிருத்தி செய்யப்படும் நல்மனப்பாங்கு தொழில் பற்றிய அறிவு, கைத்திறன் ஆதியன தமது செல்வாக்கைப் போதியளவு மாணவர்களில் தாக்கமுறச் செய்யவில்லை என்பது புலனாகிறது. முற் கூறிய தடைக்காரணிகளுள் மனப்பாங்கு சார்ந்த காரணிகளின் தாக்கம் மிகவும் பாரிய அளவில் உள்ளதை அவதானிக்கலாம். இம் மனப்பாங்குகளை மாணவர்களில் துலங்கச் செய்வதில் பெற்றோர், சமூகத்தின் பங்கு பெருமளவு உண்டு என்பதையுணர வேண்டும். பாடசாலையில் கற்கும் மாணவர் நல்மனப்பாங்குகளை உணர்ந்துகொண்டாலும் அதை நடைமுறைப்படுத்த அவர்கள் வாழும் சமூகம், சூழல் அனுமதிக்காத நிலையும் உண்டு. மாணவர் கைத்தொழில் சார்ந்த தொழிலில் ஈடு

பட்டுத் தம் பொருளாதாரத்தையுயர்த்த முனைந்தாலும் பெற்றோர் அதை அனுமதிக்காத நிலையில் வேலையற்று வீட்டில் சும்மாயிருக்கவேண்டியுள்ளது. இத்துறை சிலவேளை அவரின் ஆற்றலுக்கும் திறமைக்குமேற்றதாகக்கூடவிருக்க லாம்.

இவ்வாறு தடைசெய்வதன் மூலம் அவனது தனி ஆற் றல் விருத்தி தடைப்படுகிறது. இதனால் சமூகம் அவரால் அடையக்கூடிய நன்மைகளை இழந்துவிடுகிறது. எனவே நல்மனப்பாங்கை மாணவரிடம் மட்டும் விருத்தி செய்வது போதிய பயன்தராது. எனவே நல்மனப்பாங்கானது ஆசிரியர், அதிபர், கற்றோர், பெற்றோர் சமூகமட்டத்திலும் விருத்தி செய்யப்படவேண்டியுள்ளது. தற்கால சமூகவிருத் திக்கு ஒவ்வாத விழுமியங்களையும் மனப்பாங்குகளையும் மாற்றிப் பொருத்தமான மனப்பாங்குகளையும் விழுமியங் களையும் பரப்புவதில் பகுத்தறிவுள்ளோரின் பங்களிப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. ஏனெனில் "உடலுழைப்பால் ஈடுபடும் தொழில்கள் தாழ்வானது" என்னும் மனப்பாங் கானது கற்றோர், பணக்காரவர்க்கத்தினர் உடைநலுங்கா உத்தியோகம் பார்ப்போர் மட்டத்திலேயே பெருமளவு பரவியுள்ளது. பரம்பரையாக விவசாயம், கடற்றொழில், கைத்தொழில் புரிவோர் மட்டத்தில் இம் மனப்பாங்குகள் பெருமளவு கவனத்துக்கெடுக்கப்படுவதில்லை. ஆயினும் தற் போது நடுத்தர வர்க்கத்தினர் மத்தியிலும் பரவி வருகின் றது. எங்கு நோயுண்டோ அங்கேயே வைத்தியம் தேவை என்பதையுமுணரவேண்டியுள்ளது. "அறிமுறையாகக் கூற லாம் நடைமுறையில் சாத்தியமில்லை" என்று ஒருகாலத் தில் கூறிய மனப்பாங்குகள், விழுமியங்கள் இன்று மாறி வருவதைக் கண்ணூடாகக் கண்டுகொண்டிருக்கின்றோம். இன்று உடைநலுங்கா உத்தியோகம் பார்க்கும் தொழிலும் நிலையானது என்று கூறுவதற்கில்லை. எனவே எச்சந்தர்ப்பத் திற்கும் ஏற்றதாக எம்மையும், எமது இளம் சிறாரையும் வழிநடத்த வேண்டியது பெற்றாரினதும், சமூகத்தினதும்



RECEIVED 1989-9-25 Periodicals Division Library Lanka

பொறுப்பு என்பதைப் பகுத்தறிவுடன் புரிந்துகொண்டாலே காலவோட்டத்துடன் சேர்ந்து வாழலாம்.

மனப்பாங்குசார்ந்த தடைக் காரணிகளை மாற்றுவதற்குக் கத்தியோ, பொல்லோ துப்பாக்கியோ தேவையில்லை. பகுத்தறிவைப் பயன்படுத்திச் சிந்தித்தாலே போதும். இக் காரணிகளை அகற்றினல் இன்று வேலையற்றிருக்கும் பலருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்பதை மறக்கலாகாது. இக் கருத்துக்களைத் தொழில்நுட்பக்கல்வி அபிவிருத்தி ஆண்டில் பிரபல்யப்படுத்திச் சமூக மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கவேண்டும் என்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## செயல்முறைத் திறன் விருத்தி செய்வதில் ஆர்வம் காட்டப்படல் வேண்டும்

பாடசாலை மாணவர் செய்முறைத் திறனை அபிவிருத்தி செய்வதில் ஆர்வம் காட்டுவது குறைவாகவுள்ளது. இதற்குக் காரணங்கள்பல. அவற்றுள் ஒன்று முன் அத்தியாயத்தில் கூறப்பட்ட தவருன மனப்பாங்கின் தாக்கமாகும். மற்றது தொழில்நுட்பக் கல்வியை க. பொ. த. சாதாரணதரப் பரீட்சைக்கு எடுக்கவேண்டும் என்ற கட்டாயமின்மையும், உயர்தரவகுப்புக்குச் செல்வோருக்கு இப் பாடம் கட்டாயம் சித்தியடைந்திருக்கவேண்டுமென்ற நிபந்தனையின்மையும் முக்கியமானவையாகும். 1972ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கல்வித்திட்டத்தின்போது H. N. C. E. வகுப்புக்குத் தெரிவுசெய்யப்பட வேண்டுமாஞல் தொழில் முன்னிலைப் பாடமொன்றில் சித்தியடைந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையிருந்ததினுல் எல்லா மாணவரும் கற்கவேண்டுமென்ற ஆர்வமும், தம் பிள்ளைக்குக் கற்பிக்கவேண்டுமென்ற ஆர்வமும் பெற்றோருக்கு மிருந்தது. அன்று இப் பாடங்களுக்குத் தனியார் கல்வி நிலையங்களில் வகுப்பு நடைபெற்றதும் உண்டு.

அன்று முன்கூறிய இடையூறான மனப்பாங்குகளின் தாக்கம்கூட இருக்கவில்லை. ஆனால் இன்றைய கல்வித் திட்டத்தில் இப்பாடங்கள் க. பொ. த. சாதாரண பரீட்சைக்குக் கட்டாயம் எடுக்கப்படவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லாததும், செயல்மூலமான பரீட்சை நடாத்தப்படாததும் காரணமாக மாணவர், பெற்றோர் மனதில் பெரும் தூண்டுதல்களை ஏற்படுத்தவில்லை. இதனால் மாணவர் ஆர்வம் காட்டவில்லை. இதன்பயனாக விளைந்ததே வேலையில்லாப் பிரச்சினையும், செயல்திறனற்ற மாணவர் கூட்டமுமாகும். இதனுள் அவதானிக்கப்பட வேண்டிய முக்கியவிடயமென்ன வென்றால் அத்திட்டத்திலும் உயர் வகுப்புக்குத் தெரிவுசெய்யப்பட்டோர் சராசரி பத்துவீத மானோரே. இத்திட்டத்திலும் தெரிவுசெய்யப்படுவோர் சராசரி பத்துவீதமானோரே. அம் மாணவர்கள் உயர் கல்விக்குச் செல்லமுடியாத நிலையில் பாடசாலையை விட்டுவெளியேறி ஏதாவதொரு தொழிலைத் தெரிந்தெடுக்கக் கூடிய தொழில் மகத்துவமுணர்ந்தவர்களாகவும், அடிப்படைத் திறனுடையவர்களாகவும் வெளியேறினார்கள். இன்று அது போலன்றி பெருமளவு அறிமுறையறிவுடையோராகவுள்ளதால் வேலைவாய்ப்புக் குறைவாகவுமுள்ளது. இது நாட்டினபிவிருத்திக்குப் பாதகமாகவுள்ளது. இவ்வாறு இலட்சக்கணக்கானோர் (ஆண், பெண்) வேலையின்றியிருப்பதனால் அபிவிருத்திக்கான மனிதவளம் வீணாகின்றது என்பதே உண்மையாகும். நாட்டின் வருமானத்தில் பெரும்பகுதியை கல்விக்காகச் செலவு செய்தும் அநேகமானவர்களை வாழ்க்கைக்குத் தயார் செய்யவில்லை என்றால் இந்நிதி பெருமளவு விரயமென்றே கூறலாம். எனவே மனிதகுலத்தின் பிரயத்தனங்கள் யாவும் அவர்களுக்கு உச்சப் பயனளிக்கச் செய்வதே யாவரினதும் கடமையாகும்.

தொழிலொன்றைத் தெரிவதற்கு மட்டுமன்றித் தாம் கற்கும் ஏனைய பாடங்களைச் சரியாகவும், விளக்கமாகவும் கற்கவும், பொருள்களை ஆக்கவும், செய்முறைகளைச் செய்துபார்க்கவும், ஆசிரியர் தனது கற்பித்தலைப்

பயனுள்ளதாக்கவும், கற்கும் அறிவை நாளாந்த வாழ்வில் பயன்படுத்தக்கூடிய தாக்கவும் உதவும். செய்முறைத்திற னற்றதாலேயே பெருமளவு மக்கள் தம் வாழ்க்கையில் ஆற்றவேண்டிய சிறு வேலைகளைக்கூட செய்வதற்கு வெளி வேலையாட்களை நம்பிக் காத்திருக்க வேண்டியும் உள்ளது. இந்நிலை ஆக்கபூர்வமானதல்ல. தற்போது வாழ்க்கைத் திறனெனும் பாடத்தைக் கற்கும் மாணவர் தம் வாழ்க் கையில் சந்திக்கும் சிறுசிறு செய்முறை வேலைகளைக் கற்றல் நிகழ்ச்சியினூடாகக் கற்பதனால் பெரும் பயனடைந்து வருவதையும் நாம் கண்காட்சிகளில் அவதானிக்கக்கூடிய தாகவிருந்தது. எனவேமாணவர் செய்முறைக் கல்வியில் நாட்டமடைய வேண்டியதவசியமாகும். செயல்முறைத் திறனற்று வெளியேறிய உயர்வகுப்பு மாணவரும், பட்ட தாரிகளுமே அறிமுறை சார்ந்த உடைநலுங்காவேலை வாய்ப்பை எதிர்பார்த்துச் சங்கமமைத்துக் கொண்டிருக் கின்றனர் என்பதையும் மனத்திலிருத்தியே 1987 தொழில் நுட்பக் கல்வியபிவிருத்தியாண்டு நடைமுறைப்படுத்த வுள்ளது.

## தொழில்பற்றிய அறிவும் வேலைவாய்ப்புக்கு அவசியமாகும்

பாடசாலைகளில் தொழில்நுட்பக் கல்வியூடாக விவ சாயம், மனையியல், மரவேலை, உலோகவேலை போன்ற பல பாடங்களை மாணவர் கற்றிருந்தும் பாடசாலையை விட்டு வெளியேறியதும் தொழில் வாய்ப்பைத் தேடிக் கொள்ள முடியாமைக்குரிய காரணங்களில் தொழில் பற்றிய அறிவின்மையும் ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது. உதாரணமாக மனையியல் மூலம்பல்வேறு உணவுப் பண்டங்களைத் தயாரித்தல், மனைநிர்வாகம், நோயாளரைப் பராமரித்தல், முதலுதவி, உணவுப் போஷணை போன்ற பல்வேறு விடயங்களையும் அறிமுறை யாகவும், செயல்முறையாகவும் கற்றமாணவர்கள் வேலை

வாய்ப்பைத் தேடுவதற்குத் தடையாகவுள்ளது. தொழில் பற்றிய அறிவின்மையே. காரணம், இக்கல்வியைக் கற்கும் போது பரீட்சையை மையமாகக் கொண்டு கற்றதும், கற்பிக்கப்பட்டதுமேயாகும். இதன் மூலம் நல்ல பரீட்சைப் பெறுபேற்றைப் பெற வழிகாட்டியிருக்கக்கூடும். ஆனல் இப் பெறுபேறு எல்லாமாணவருக்கும் உடைநலுங்கா வேலைவாய்ப்பையோ, பல்கலைக்கழகக் கல்விவாய்ப்பையோ பெற்றுத் தருமென்று கூறமுடியாது. அவ்வாறெனில் இக் கல்வியில் உள்ள குறைபாடு என்னவென்றகேள்வி எழுகின்றது. மனையியலில் உணவுப்பண்டங்களைச் செய்யும் முறை பற்றி விளக்கமளிக்கப்பட்டதே தவிர அதைச் சந்தைப் படுத்திலாபமடைவதுபற்றியோ, எவ்வாறு சந்தைப்படுத்துவது மூலப் பொருட்களை எங்கு, எவ்வாறு, கொள்வனவு செய்வது என்பதுபற்றியோ, இத்தொழிலில் ஈடுபட்டுள்ளோர் யார்? அவர்களின் கடமைகள், உரிமைகள் எவை? இப்பிரிவோடு சம்பந்தப்பட்ட வேறு ஸ்தாபனங்கள் எவை? அவற்றின் பங்களிப்பு என்னவென்பது பற்றியோ, தொழிலொன்றைத் தேடிக் கொள்ளமுன், மேற்கொள்ளவேண்டிய ஆராய்வுகள் எவை? தொழிலைத் திட்டமிடும் முறை, இப்பாடத்தினூடாக நாம் தேடக் கூடிய வேலை வாய்ப்புக்கள் எவை? போன்ற பல்வேறு பொதுவிடயங்கள் எடுத்துரைக்கப்படுவதில் ஆர்வம் காட்டப்படவுமில்லை. மாணவர் அவற்றை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டவுமில்லை. இதனல் தொழில்பற்றிய போதிய விளக்கம் இன்மையால் தொழிலைத்தேடி முயற்சிக்க முடியாமல் உள்ளது. ஆசிரியரும், பெற்ருேரும் தொழில்வழி காட்டவும் முடியாமலும் உள்ளது. இவ்விடயங்கள் விளக்கமாகப் பாடத்திட்டத்தில் குறிப்பிடப்படா விட்டாலும் ஆசிரியர் இவற்றையும் சேர்த்துத் தொழில்நுட்பக் கல்வியின் நோக்கங்களுக்கமைவாகக் கற்பிக்கப்படும்போது இப் பாடம் பயனுள்ளதாகிறது. எனவே தொழில்நுட்பப் பாடம் மாணவரைப் பரீட்சைக்குத் தயார் செய்யும் பாடமாக அமையாமல் மாணவரை வாழ்க்கைக்குத்

தயாராக்கும் பாடமாகக் கொள்ளப்படவேண்டும். மேலும் தொழில் நுட்பப்பாடங்களைத் தெரிவதிலும் மனையியல் விவசாயம் ஆகிய பாடங்களுக்கு முன்னுரிமையளிக்கும் வழக்கமும் இன்று நடைமுறையில் உள்ளது. காரணம் இப்பாடங்கள் உயர்தரவகுப்புகளிலும், பல்கலைக்கழகங்களிலும் கற்பதற்குரிய வாய்ப்புகள் உள்ளதாகும். இதனால் மாணவர் இவ்விருபாடங்களில் கூடிய நாட்டம் செலுத்துவதும், பெற்றோர் இப்பாடங்களைக் கற்கும்படி தூண்டுவதும் உண்டெனினும், இதன் பின்னாலும் உடல் நலுங் காத் தொழில் மகத்துவம் உண்டென்பதை மறுக்க முடியாது. ஆனாலும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் பொறிமுறை, எலத்திரனியல், கடற்தொழில் போன்ற கைத்தொழில்கள் பெரும் பங்காற்றுவதால் இத்துறைகளிலும் பல்கலைக்கழகநெறிகள் ஆரம்பிக்கப்பட வேண்டியது அவசியமென்பதைக் கல்விமான்கள் உணர்ந்து செயலாற்ற வேண்டியதவசியமாகும்.

## தொழில்நுட்பக்கல்வி அபிவிருத்தி ஆண்டில் மேற்கொள்ளவுள்ள வேலைத்திட்டங்கள்

1. பிரசாரம் செய்தல்

1-1 தொழில்நுட்பக் கல்வியின் முக்கியத்துவத்தை உணரச் செய்யும் நோக்கில், கல்வியின், தொழில்நுட்பக் கல்வியின் நோக்கங்களையும், அவசியத்தையும், பிரிவுகளையும் பெற்றோர், மாணவர், ஆசிரியர், அதிபர், சமூகத்தினர் அறியச் செய்தல். இதற்காகப் பத்திரிகை, தொலைக்காட்சி போன்ற தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தல். இவ்வாண்டு பாடசாலை, மாவட்ட ரீதியில் நடாத்தப்படும் நடன, நாடக, இசைப் போட்டிகளிலும், தமிழ்த்தினம், கவிதை, பேச்சு, கட்டுரைப் போட்டி, கலாசார நிகழ்ச்சிகள் யாவற்றிலும் மேற்கூறிய கருத்துக்களை முக்கிய

தொனிப்பொருளாகக் கொள்ளல். கருத்தரங்குகள் நடாத்துதல். துண்டுப் பிரசுரம் வெளியிடல். சுவ ரொட்டிகள் ஒட்டுதல்.

2. மாணவர் செய்திறனை அபிவிருத்தி செய்தல்

2-1 தொழில்நுட்பக் கல்வியின் நோக்கங்களுக்கு அமை வாக வேலைத் திட்டங்களை அமைத்தலும், அதற்கு ஏற்பக் கற்பிக்கத் தூண்டுதலும், வழிநடாத்தலும்.

2-2 தொழில்நுட்பப் பாடங்களுக்கான வேலைத்திட்டங்களை வகுத்துப் பிரசுரித்து வழங்குதல்.

2-3 மாணவர் சுயமுயற்சியான செயல் முறைக்கு ஊக்க மளித்தல், கற்கும் பாடநெறியோடு சம்பந்தப்பட்ட பொருள்களை உற்பத்திசெய்தல், விற்பனைசெய்தல்.

2-4 மாணவர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருள் களைக் கொண்ட கல்விக் கண்காட்சிகளைப் பாடசாலை, வட்டார, மாவட்ட நிலையில் ஒழுங்கு செய்தல்.

2-5 மாணவர், ஆசிரியர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களைச் சேகரித்தல், விற்பனை செய்தல், பெறு மதியுணரச் செய்தல், பதிவுகள் மேற்கொள்ளுதலில் பயிற்சி.

2-6 பகுதிநேர வேலைவாய்ப்புகளைத் தேடிக்கொள்ள ஊக்கு வித்தல்.

2-7 மாணவர் கைத்திறன் அபிவிருத்தி பற்றிய தொடர் மதிப்பீட்டு முறையை அறிமுகம் செய்தல்.

3. கல்வி அபிவிருத்தி

3-1 அதிபர், ஆசிரியர்களுக்கான ஆலோசனைகள். அறி வுறுத்தல் கருத்தரங்குகளை ஒழுங்குசெய்தல்.

3-2 ஆசிரியர் சேவைக் காலக் கல்வி வகுப்புகளைத் தொடர்ச்சியாக ஒழுங்கு செய்தல்.

3-3 தொழில்நுட்பப்பாடங்கள் சம்பந்தமான கட்புலசாதனங்கள், வீடியோ நிகழ்ச்சிகள் தயாரித்து வழங்குதல்.

3-4 பாடசாலைகளில் தொழில்நுட்பக்கல்வி சம்பந்தமான நூல் நிலைய வசதிகளை அதிகரித்தல்.

3-5 பாடங்கள் சம்பந்தமான வேலைத்திட்டங்களைத் தயாரித்தலும், அச்சிடலும், விநியோகித்தலும்.

3-6 ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.

4. போட்டிகள்

4-1 தொழில்நுட்பக் கல்வியின் அவசியம், நோக்கங்கள் சம்பந்தமான பேச்சுப் போட்டிகள், வினாவிடை, புதிர்ப் போட்டிகள், கட்டுரை, விவாதங்கள், பொருள் உற்பத்தி, கலை நிகழ்ச்சிகளில் மாணவர், ஆசிரியரிடையே போட்டிகளை ஒழுங்குசெய்தல், தொழிற்கூடச் சுத்தம் ஒழுங்கமைப்புச், செயற்பாடுகளில் போட்டி, க. பொ. த. வகுப்பு பரீட்சைக்கு அதிக மாணவர்களைத் தொழிற் பாடத்துக்குத் தோற்றச் செய்யும் பாடசாலைக்குப் பரிசு.

4-2 போட்டிகளில் வெற்றிபெற்றோருக்குப் பரிசுகள், பாராட்டுகள், சான்றிதழ்கள் வழங்கி உற்சாக மூட்டுதல்.

5. தொழிற்கூட வசதிகளை அபிவிருத்தி செய்தல்

5-1 பாடசாலைத் தேவைகள், மேற்கொள்ளவேண்டிய வேலைகளை இனங்காணல், அதற்கான செலவினங்களை மதிப்பீடு செய்தல்.

5-2 உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தும் வகையில் கைவேலை, சிறுவேலைகள் செய்வதன் மூலமும் கலை நிகழ்ச்சிகள் நடாத்தியும், அன்பளிப்பு மூலமாகவும் நிதிசேகரித்தல்.

5-3 கிடைக்கக்கூடிய நிதிவளங்களைக் கொண்டு பற்றாக் குறையுள்ள கருவி உபகரணங்களைக் கொள்வனவு செய்தலும், விநியோகம் செய்தலும்.

5.4 பாடசாலைகளில் பயன்படாது இருக்கும் கருவி, உப கரணங்கள், தளபாடங்களின் பட்டியல் தயாரித்த லும், பற்றாக்குறையுள்ள பாடசாலைகளுக்குப் பகிர்ந்து அளித்தலும்.

5.5 தொழிற்கூட வசதியற்ற பாடசாலைகளில் அதைப் புதிதாக அமைக்க அல்லது வகுப்பறையைத் திருத்தி யமைக்கவேண்டிய நடவடிக்கையெடுத்தல்.

5.6 தொழிற்கூடக் கருவி உபகரணங்கள், களவு போவதைத் தடுக்கும், முகமாகப் பாடசாலை மட்டத்தில் விழிப்புக்குழுக்களை அமைத்து அல்லது வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஊக்கமளித்தல்

6. செயற்றிட்டங்களை ஒழுங்கு செய்தல்

6.1 தொழில் நுட்பக் கல்வியின் தற்போதைய நிலைபற் றிய மதிப்பீடுகளை மேற்கொள்ளல் (பாடசாலை, வட் டார, மாவட்ட நிலைகளில்,)

6.2 தரவுகளைச் சேகரித்தலும், பின் தங்கிய அல்லது அபிவிருத்தி செய்யவேண்டிய பிரிவுகளை இனங் காணுதலும். (உதாரணம்: தொழிற்கூடமமைத்தல் பாடசாலைத் தளபாடம் திருத்தல். ஆய்வுகூடதொழிற் கூட உபகரணங்கள் தயாரித்தல்.

6.3 செய்திட்டமிடலும் நடைமுறைப்படுத்தலும். எல்லா மாணவரும் பங்குபற்றும் சிரமதானம் ஒழுங்கு செய்தல்.

6.4 மேற்கொள்ளப்பட்ட செய்திட்டம் பற்றிய மதிப்பீடு மேற்கொள்ளல்.

6.5 ஒவ்வொரு வட்டாரத்திலும், அல்லது கொத்தணியிலும் உள்ள ஒரு பாடசாலையைத் தெரிவு செய்து அதனை ஒரு தொழில்நுட்ப மாதிரிப்பாடசாலையாக உயர்த்த நடவடிக்கை எடுத்தல்.

## 7. முறை சாராக் கல்விப்பிரிவு சம்பந்தமான வேலைத்திட்டங்கள்

முறைசார்ந்த கல்விக்கான வேலைத்திட்டங்களோடு மேலதிகமாகப் பின்வரும் வேலைத்திட்டங்களும் நிறைவேற்றப்படும்.

7.1 வேலை வாய்ப்புகளை அதிகரித்தல்

7.1-1 வேலைமுகவர், உற்பத்தியாளர் தொழிலதிபர், பயிற்சி பெற்று வெளியேறிய மாணவர், பெற்றோர் அடங்கிய கருத்தரங்குகளை ஒழுங்கு செய்தல், வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பதற்குத் தடையாகவுள்ள காரணிகளை இனங்காணுதல், சீராக்குதலுக்கான நடவடிக்கைகளைத் திட்டமிடல் நடைமுறைப்படுத்தல்.

7.1-2 சுய வேலைவாய்ப்புப் பெற்றோரின் அனுபவங்கள் பல்வேறு தொழிற்துறைகளில் உள்ள வேலைவாய்ப்புகள் பற்றிய விபரணப்படங்கள் (வீடியோ) தயாரித்தல், விநியோகித்தல் – திணைக்களத்தில் பிரதிக் கூடம் அமைத்தல்.

7.1-3 வேலைவாய்ப்புக்களைப்பெற ஊக்குவித்தல்; முறைசாராக் கல்வித்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றோர் தொழில் பயிலுனராகத் தொழிற்சாலைகளில் கடமையாற்ற வசதிகள் செய்தல்.

7.1-4 தொழிற்துறை வழிகாட்டலோடு தொடர்புடையவர்கள், தொழில் நிறுவன முகவர்கள், விற்பன்னர்களை அழைத்து மாணவருடன் கலந்துரையாடச் சந்தர்ப்பம் அளித்தல்.

8. ஆக்கபூர்வமாகச் செயற்படும் ஆசிரியர், அதிபர், பாடசாலைகளை இனங்காணுதலும் ஊக்குவிப்புச் செய்தலும்

8.1 ஆசிரியரின் சேவை, செய்திறன், ஆர்வம், கலைத்திட்ட இணைச்செயற்பாடுகள் பற்றிய மதிப்பீடு மேற்கொள்ளல்.

8.2 தொழில் நுட்பக்கல்வி அபிவிருத்திக்கு ஊக்கமளிக்கும் அதிபர்களின் சேவையை மதிப்பீடு செய்தல்.

8.3 பாடசாலை மட்டத்தில் தொழில்நுட்பக் கல்வி சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஆக்கபூர்வவேலைகளை மதிப்பிடல்.

8.4 தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர், அதிபர், மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்குவதுடன், பதவியுயர்வுகளிலும் முன்னுரிமை அளித்தல், பரிசுகள் வழங்குதல், பாடசாலை வளர்ச்சிக்கு மேலதிக நிதியுதவி செய்தல்.

# மாணவர் நம் வாழ்வை நாமே வழிப்படுத்து வோம்

"பசியிருந்தாலே புசிக்கலாம்" ஆதலால் கல்வியின் பொது நோக்கங்களை நாம் அறிந்து கொண்டாலே கற்றலை அர்த்தமுள்ளதாக்கி அதற்கான பொறுப்பை நாமே ஏற்றுக்கொள்ளலாம்.

1. கல்வியின் நோக்கங்களை அறிந்துகொள்வோம்

   1. சமூகவழிப்படுத்தல்
   2. தனியாற்றல்களை விருத்தி செய்தல்

1.1 சமூகவழிப்படுத்தலென்பது: ஒவ்வொருவரும் தாம் வாழும் சமூகத்தோடும் சூழலோடும் சேர்ந்து ஒன்றித்து வாழ்வதற்கு ஏற்ற குணாதிசயங்களுடைய பூரண மனிதனாக்கல்.

1.2 தனியாற்றல்களை விருத்தி செய்தலென்பது: ஒவ்வொருவரினதும் தனி ஆற்றல்களை விருத்திசெய்து சமூகத்திற்குப் பயனுள்ளதாக்கல்.

2. சமூக வாழ்வுக்கேற்ற பூரண மனிதனின் குணாதிசயங்களாவன:

   1. அடிப்படை அறிவுடையவனாக இருத்தல்.
   2. நாட்டின் நற்பிரஜையாகவிருத்தல்.
   3. பொருளாதார வளமுடையவனாகவிருத்தல்
   4. சமூக நீதியுணர்வுடையவனாகவிருத்தல்.
   5. சமூகத்தோடு தொடர்புகொள்ளக்கூடியவனாக விருத்தல்.

2-1 அடிப்படை அறிவுடையவனாகவிருத்தல் என்பது:

1) ஒவ்வொருவரும் தமது எண்ணங்களையும், தேவைகளையும், வெளிப்படுத்தக் கூடியதாகவிருத்தல். அதாவது பேச, எழுத, வாசிக்க, அடிப்படைக் கணக்குகளைச் செய்யத் தெரிந்திருத்தலும் இவற்றுக்குப் பயன்படக்கூடிய புலனுறுப்புகளைச் சரியாகப் பயன்படுத்தவும், தன்னுடலையும், பொதுச் சுத்தத்தையும் பேணக்கூடியதாகவும் இருத்தல்.

2) வேலைமாற்றம் செய்து ஓய்வு எடுக்கவும், அழகுக் கலைகளை இரசிக்கக் கூடியவனாகவுமிருத்தல்.

3) ஒழுக்கமுடையவனாகவும், புத்தி சம்பந்தமான நாட்டங்களையுடையவனாகவும் இருத்தல்.

2-2 நாட்டின் நற்பிரஜையாகவிருத்தல் என்பது:

1) ஒவ்வொருவரும் தமது வாக்குரிமையைச் சரியான முறையில் பயன்படுத்தத் தெரிந்திருத்தல்.

2) ஜனநாயக சமதர்மக் கொள்கைகளையும், எண்ணக் கருத்துக்களையும் வெளியிடக்கூடியவனாக இருத்தல்.

3) மாற்றுக்கொள்கையைக் கேட்பதிலும், புரிந்து கொள்வதிலும் பொறுமையைக் கடைப்பிடித்தல்.

4) முடிவை எடுத்தலும், விவாதித்தலும், முடிவு எடுத்தபின் முடிவை நிறைவேற்றும் பொறுப்பை யாவரும் ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கைப் பெறுதலும்.

5) மனிதன் ஒவ்வொருவனையும் தன்னைப்போல் மதிக்காது பிரசாரங்களிலிருந்து ஏமாறுது உண்மையைக் காணும் பகுத்தறிவை பெற்றிருத்தல்.

2-3 பொருளாதார வளமுடையவனுக இருத்தலென்பது:

1) ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கையை நடத்துவதற்குத் தேவையான பொருளாதார வளத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தொழிலைத் தெரிந்து அதைத் திறமையாகச் செய்யத் திட்டமிட்டு முயற்சிக்கக் கூடியவனுகவிருத்தல்.

2) சமூகத்தில் ஆற்றப்படும் தொழிலின் மதிப்பை இரசித்தல்.

3) பொருள்களை வாங்குவதிலும், விற்பதிலும் எற்ற அறிவுடையவனுகவிருத்தல்.

4. சமூக நீதி யுணர்வுடையவனுயிருத்தலென்பது

1) சமூக நீதிக்காகவுழைத்தல்.

2) சமூகத்தில் திருப்தியீனமான நிலைகள் ஏற்பட்டால் அதைத் திருத்துவதற்கு முயற்சி செய்தல்.

3) தேசத்தின் செல்வங்களைப் பாதுகாக்கும் உணர்வுடையவனுயிருத்தல்.

4) ஒழுங்கானதென ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டங்களுக்கு அமைந்து நடத்தல்.

5) ஜனநாயக இலட்சியங்களுக்கு மதிப்புக்கொடுத்தல்.

5. தொடர்பு கொள்ளக்கூடியவனுகவிருத்தலென்பது.

1) தாய், தந்தை, சகோதரர், சுற்றத்தார், ஆசிரியர், பெரியார் போன்று மற்றவர்களையும் மரியாதை செய்யும் பழக்கங்களையுடையவனுகவிருத்தல்.

2) வீட்டில் வாழ்வோருடன் சந்தோஷமாக வாழக் கூடியவனுகவிருத்தல்.

3) பாடசாலை, சனசமூக நிலையங்கள்போன்ற குழுக்களில் ஒத்துழைத்துத் தனது சேவையைக் கொடுக்கக்கூடியவனாயிருத்தல்.

4) கூட்டுத்தாபனங்கள், கிராமச்சங்கங்கள் போன்ற குழுக்களில் ஒத்துழைத்துத் தனது சேவையைக் கொடுக்கக்கூடியவனாகவிருத்தல்.

5) சர்வதேசரீதியில் பலதரப்பட்ட சாதியாரோடும் தொடர்புகொள்ளக்கூடியவனாகவிருத்தல்.

2. கல்வியின் நோக்கங்களை நிறைவு செய்யவுதவுவோரையும், ஸ்தாபனங்களையும் அறிந்து கொள்வோம்.

தாய், தந்தை, சுற்றம், சூழல், ஆசிரியர், பாடசாலை, நூல்நிலையம், பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, ஆலயம், தொழில் செய்யுமிடம் போன்றன.

3. நாம் ஏன் கற்கவேண்டும்?
சமூகத்தோடு சேர்ந்து வாழ்வதற்கேற்ற குணாதிசயங்களுடைய பூரண மனிதனாகவாகும்.

4. ஒவ்வொருவரும் பொருளாதார வளமுடையவனாகவிருக்கத் தேடிக்கொள்ள வேண்டியது: தொழிலாகும்.

5. தொழிலொன்றைத் தேடிக்கொள்ள நாம் பெற்றிருக்க வேண்டிய குணாதிசயங்கள்:

1) தொழில்பற்றிய அறிவு.
2) கைத்திறன்.
3) நல்மனப்பாங்கு.

தொழில் பற்றிய அறிவென்பது: நாட்டில் புரியப்படும் பல்வேறு தொழில்கள், அவற்றின் தன்மை, பயன்படும் மூலப்பொருள்கள், உற்பத்தி செய்யப்படும் முறைகள், கைத்திறன் விற்பனை முறைகள், ஈடுபட்டுள்ளோர் ஈடுபட்டுள்ள ஸ்தாபனங்கள் பற்றிய அறிவு, திறன்களைப்பெற்றிருத்தல்.

கைத்திறன் என்பது: ஒரு செயல்முறையை அல்லது கருமத்தை உடலுறுப்புகளைப பயன்படுத்திச் செய்யுமாற்றலைக் குறிக்கும். இவ்வாறு செய்வதற்கு ஏற்றதாக உடலுறுப்புகளைப் பழக்கப்படுத்திகொண்டாலே வேலையைச் சரியாகவும், துரிதமாகவும், நுட்பமாகவும் செய்யமுடியும்.

நன்மனப்பாங்கு என்பது: குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு மனிதன் நடந்துகொள்ளும் நடத்தையைக் குறிக்கும். இந் நடத்தை ஆளுக்கு ஆள் வேறுபடும். இந் நடத்தைகள், பூரணமனிதனின் இலட்சணங்களோடு ஒத்துப்போகும்போது நல் மனப்பாங்கு என்பர். தொழில்கள் யாவும் சமமானவை. அவையாவும் மனிதனின் தேவைகளை நிறைவு செய்யவே மேற்கொள்ளப்படுகின்றன எனும் நல்மனப்பாங்கு இல்லாத ஒருவன் தொழிலைத் தேடிக்கொள்ளக் கஷ்டப்படுகின்றான் என்பதை உணர்தல்.

6. தொழில் பற்றிய அறிவு, கைத்திறன், நல் மனப்பாங்குகளை வளர்த்துக்கொள்ளக் கிடைக்கும் சந்தர்ப்பங்களாவன:

பாடசாலைப் பொதுக் கல்வியாகும். கற்பிக்கப்படும் எல்லாப் பாடநெறிகளினூடாகவும் அறிவு, திறன் மனப்பாங்குகளைப் பெறலாமெனினும் தொழில் நுட்பக் கல்வியினூடாக பெறுவதற்குச் சந்தர்ப்

பங்களதிகமாகும். இச் சந்தர்ப்பங்களை முழுமை யாகப் பயன்படுத்தினாலேயே முழுப்பயனையும் பெற லாம். பரீட்சையில் சித்தியடைவதை மட்டும் நோக்கமாகக் கொள்ளாது. "கல்வி பூரண மனித னாவதற்கு" எனும் குறிக்கோளுடன் கற்கவேண் டும். வெறும் அறிமுறைக் கல்வி பரீட்சையில் சித்தி பெற உதவினாலும், சீரிய வாழ்வை அமைக்க இப் பத்திரங்கள் உதவாமல் போகலாம். அறிவு, கைத் திறன், நல்மனப்பாங்குடையவன், தகுதிப்பத்திரம் இல்லாவிடினும் நல்ல பொருளாதார வளம்மிக்க வாழ்வை அமைத்துக்கொள்ள முடியும். ஆகவே தொழில்நுட்பக்கல்வியின் நோக்கங்களை உணர்ந்து விருப்புடன் கற்பதே மாணவர் கடமையாகும்.

## 7. தொழில்நுட்பக் கல்வியின் நோக்கங்கள் எவை?

7-1 நாட்டில் புரியப்படும் பல்வேறு தொழில்கள் பற்றிய அறிவை விருத்திசெய்தல்.

7-2 தொழில் புரிவதற்கான பொதுவான கைத்திறன்களை விருத்திசெய்தல்.

7-3 தொழில்கள் பற்றிய நன்மனப்பாங்கை விருத்தி செய்தல்.

7-4 பல்வேறு பாடங்களிலும் பெறும் அறிவுகளைத் தொடர்புபடுத்திய பிரயோகிக்கும் ஆற்றலை வளர்த் தல்.

7-5 தொழில்களில் ஈடுபட்டுள்ளோரையும், ஸ்தாபனங் களையும், அவற்றின் கடமைகளையும் பற்றிய அறிவை வளர்த்தல்.

7-6 தொழில் மகத்துவத்தை உணரச்செய்தல்.

7-7 மாணவரின் ஆக்க முயற்சிகளுக்குச் சந்தர்ப்பம் அளித்தல்.

7-8 பெறுமதிவாய்ந்த சேவை அல்லது உற்பத்தி செய்ய முடியும் எனும் நம்பிக்கையை விருத்திசெய்தல்

8. வேலையற்றிருக்கும் இளைஞர்களே! இக்கூற்றுகளையிட்டும் சிந்திப்போமா?

☐ உடல் உழைப்பால் ஈடுபடும் தொழில்கள் நாட்டில் நிறைந்திருக்க நீ வேலையில்லை என்றிருப்பது நியாயமோ?

☐ இவ்வளவு கற்றிருந்தும் உனது பொருளாதாரத் தேவைக்குப் பெற்றோரை வருத்தலாமா?

☐ வயதான பெற்றோரை வாழவைக்க வேண்டிய நீ! அவர்தம் உழைப்பில் வாழலாமா?

☐ கைத்தொழிலொன்றைத் தேடிக்கொள்ளத் தடையாகவிருக்கும் மனப்பாங்கை விட்டுவிடு.

☐ கைத்தொழில் ஒன்றைப் பெறத் தொழில்பற்றிய அறிவு கைத்திறன், நல் மனப்பாங்குகளை வளர்த்துக்கொள்.

☐ தொழிலொன்றைத் தேடுமுன் உன் தொழிற் தகுதியை மதிப்பிடு.

☐ தொழில்களை ஆண்களுக்குரியவை, பெண்களுக்குரியவை எனப் பாகுபடுத்துவது வேலைவாய்ப்புக்கு முட்டுக்கட்டையே.

9. மாணவர் நம் நல் வாழ்வுக்கு வழிகாட்டக் கூடிய பின்வரும் கோஷங்களை வாய் மொழிவோம்.

☐ எம்மை வாழ்க்கைக்குத் தயாராக்குங்கள்.

☐ எம்மை அடிப்படை அறிவு, பொருளாதாரவளம், சமூக நீதியுணர்வு, நாட்டின் நற்பிரஜை ஆகிய குணாதிசயங்களுடைய முழுமனிதனுக்குங்கள்.

☐ எமது தனி ஆற்றல்களை வளர்க்க உதவுங்கள்.

☐ எம்மைப் புத்தகப் பூச்சிகளாக்காதீர்கள்.

☐ எமது விருப்புக்கும், திறமைக்கும் அப்பாற்பட்ட உங்கள் அபிலாஷைகளை எம்மீது திணிக்காதீர்கள்.

☐ பரீட்சைப் பெறுபேறு மட்டும் எம்மை முழுமனிதனுக்காது

☐ செயல்மூலம் உணர்தலே சிறந்த கற்றல்

செயல்மூலம் உணர்விப்பதே சிறந்த கற்பித்தல்.

☐ நாமாகவே சிந்திக்க அனுமதியுங்கள்.

☐ உடல், உளநன்மனப்பாங்கு விருத்தியே நமக்கு வேண்டும்

☐ தொழில்கள் யாவும் வாழ்வை நிறைவு செய்ய மேற்கொள்ளும் சேவையே.

☐ கைத்தொழில்களில் ஈடுபடுவது தாழ்வானது அல்ல.

☐ எமது விருப்புக்கும் ஆறுதலுக்கும் ஏற்ற தொழில் ஒன்றைத் தெரிவுசெய்து பொருளாதாரவளம் பெருக்க எம்மை அனுமதியுங்கள்.

☐ உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது.

"கைத் தொழிலொன்றைக் கற்றுக் கொள்
கவலை யுனக்கில்லை ஒப்புக்கொள்
எத்தொழில் எதுவும் தெரியாமல்
இருப்பது உனக்கே சரியாமோ"

# முடிவுரை

இவ்வெளியீட்டின் மூலம் தொழில்நுட்பக் கல்வியின் தற்போதய நிலையும் அதற்கான காரணங்களும், அபிவிருத்தி செய்யவேண்டிய பிரிவுகளும், அபிவிருத்தி மாதிரியும், வேலைத்திட்டங்களும், திட்டமிடல், கருமமாற்றல் முறைகளும், மிகச்சுருக்கமாகக் காட்டப்பட்டுள்ளன.

கல்வியோடு தொடர்புடைய யாவரும் இவ் விடயங்களை மனதிலிருத்தி ஆக்கபூர்வமாகச் செயற்படுவதேஇச்சமூகத்துக்கு ஆற்றும் பெரும் பணியாகும். மேலும் மாணவனின் கல்வி வழி காட்டலுக்கு உதவக்கூடிய கல்வி சார் அடிப் படை அம்சங்களும், சில சிந்தனைக்கேற்ற கருத் துகளும் பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இத்துறை தொடர்பாக மேலும் ஆக்கபூர்வ மான ஆலோசனைகளை வழங்க விரும்பும் கல்வி யாளர்கள் கல்வித்திணைக்களத்தின் தொழில்நுட்பப் பிரிவுடன் தொடர்பு கொண்டு இப்பணியை மேலும் சீர்செய்ய உதவினால் எமது இளஞ் சிறுர்களுக்கு நாம் வழிகாட்ட வசதியாக அமையும்.

நன்றி.

ச. சுப்பிரமணியம்
கல்வி அலுவலர்
(தொழில் நுட்பம்
முறைசாராக்கல்வி)
யாழ்ப்பாணம்.

கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம்.

# Conclusion

Though this publication I have endeavoured to make a study of the state of Technical Education in our schools and in a small way analysed the reasons for the present state of Technical Education. This book let inter links the areas of development scheme of work implementation of work programme in the technical education at the school level.

People who are concerned with the education of the children can help the society very much by involving constructively in the development of techni-cal education.

I have also enumerated basic guide lines to the students of technical education. I request the compe-tant personals in the field of technical education to contribute by way of up fill suggesstions to up lift and guide our generation in this studies.

S. Subramaniam
Education Officer
(Technical Subjects)

ARCHIVES

Unive ... Lanka
1989-9-25
Per ... en
Library



"Year of Development of Technical Education"
1987

S. Subramaniam
Education Officer.
(Tech. Edu.,)

Published by:
Examination Council
Dept. of Education
Jaffna.







